04.12.2024 MCOP.No.54/2021 PW2 Name :.**பழனி**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கபட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

**நீதிமன்றத்திலிந்து சாட்சி சம்மன் எதுவும் வரவில்லை. சண்முகம் அழைத்து தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். சண்முகத்தின் சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. ஆறுமுகத்திற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது எனக்கு தெரியும். டிராக்டரின் பதிவு எண். டிஎன்** 23 **பிஎக்ஸ்** 8271. **எங்கள் ஊரிலிருந்து ரோட்டிற்கு வரும் சாலை குறுகலானது என்றால் சரிதான். வாகனங்கள் மெதுவாக தான் செல்லவேண்டும். விபத்தில் இறந்தவரின் வயது சுமார்** 70 **இருக்கும். விபத்தில் இறந்தவரின் கவனக்குறைவால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. காவல் நிலையத்திற்கு நான் செல்லவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. சண்முகத்திற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 04/12/2024 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

Sd/B.ராஜா,
சார்பு நீதிபதி
வாணியம்பாடி.